## சுருக்கம்

செய்தி மக்கள் தொடர்பத் துறை – 2018–19ஆம் ஆண்டுக்கான மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு – செயலாக்கம் செய்ய தமிழ்நாட்டிலுள்ள பத்திரிகை துறையினருக்கான பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி உயர்த்தி வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (நிர்வாகம்–4)த் துறை

அரசாணை (நிலை) எண் 121 நாள் 30.07.2018
திருவள்ளுவர் ஆண்டு 2049
விளம்பி வருடம் ஆடி 14– ம் நாள்
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.66, செய்தி மற்றும் சுற்றுலா (செ.வெ.)த் துறை, நாள் 20.3.1997.
2. அரசாணை (நிலை) எண்.85, செய்தி மற்றும் சுற்றுலா (செ.வெ.)த் துறை, நாள் 28.4.1999.
3. அரசாணை (நிலை) எண்.78, செய்தி மற்றும் சுற்றுலா (செ.வெ.)த் துறை, நாள் 11.4.2000.
4. அரசாணை (நிலை) எண்.144, செய்தி மற்றும் சுற்றுலா (செ.வெ.)த் துறை, நாள் 28.9.2001.
5. அரசாணை (நிலை) எண்.246, செய்தி மற்றும் சுற்றுலா (நிர்.4.)த் துறை, நாள் 16.10.2006.
6. 2018–19ஆம் ஆண்டுக்கான மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள் 25.06.2018.

------

**ஆணை:**

தமிழ்நாட்டிலுள்ள பத்திரிகை துறையினர் நலன் கருதி, அரசு உரிய பரிசீலனைக்குப் பின்னர், பத்திரிகைத் துறையில் தொடர்ந்து பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள் பணியிலிருக்கும்போது இயற்கை எய்தினால் அவர்கள் குடும்பத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து, குடும்ப உதவி நிதியாக பார்வை ஒன்று முதல் நான்கு வரை படிக்கப்பட்ட அரசாணைகளின்படி, முறையே ரூ.25,000/–, ரூ.40,000/–, ரூ.50,000/–, ரூ.2,00,000/– என வழங்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி 20 ஆண்டுகள் பணிபுரிந்து, பணியிலிருக்கும் காலகட்டத்தில் இறந்து விடுவார்களேயானால் அவர்களுடைய குடும்பத்திற்கு ரூ.2,00,000/– என்றும், 15 ஆண்டுகள் பணிபுரிந்து இருப்பார்களேயானால் ரூ.1,50,000/– என்றும், 10 ஆண்டுகள் பணிபுரிந்து இருப்பார்களேயானால் ரூ.1,00,000/– என்றும், 5 ஆண்டுகள் பணிபுரிந்து இருப்பார்களேயானால் ரூ.50,000/– என்றும் குடும்ப நிதி வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

த.பி.பா.,